**ORIGINAL ARTICLE**

# ஆனந்தரங்கப்பிள்ளையின் ஆளுமைத் திறன்

## [ANANDARANGAPILLAIYIN AALUMAI THIRAN]

## PERSONALITY SKILLS OF ANANDARANGAPILLAI

**வெ.புவனேஷ்வரி [1] / V.Bhuvaneswari [1]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா / Doctoral Candidate, International Institute of Tamil Studies, Chennai, India.
Email: bhuvanav0@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/54

**ஆய்வுச் சாரம்**

பொதுவாக நாட்குறிப்பு என்பது ஒரு மனிதனின் வாழ்வில் நிகழும் அன்றாட நிகழ்வுகளை ஓர் ஏட்டில் குறித்து வைத்தல் அல்லது பதிவு செய்தல் எனக் கருதலாம். அவ்வகையில், உலகிலேயே நாட்குறிப்பு இயக்கத்தின் முன்னோடி எனப் புகழப்பெற்றவர் ஆங்கில நாட்குறிப்பாளர் சாமுவேல் பெப்பீசு ஆவார். இவருக்கு அடுத்தப்படியாகப் புகழப்படும் பெருமைக்குரியவர் தமிழில் நாட்குறிப்பினை எழுதிய ஆனந்தரங்கப்பிள்ளை என்று கூறினால் அது மிகையாகாது. ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பினைச் 'சொஸ்த லிகிதம்' அல்லது தினப்படி என்ற சொற்களால் குறிப்பிடுகிறார். ஆனந்தரங்கர் என்பவர் 18ஆம் நூற்றாண்டு காலத்தில் பிரெஞ்சு ஆட்சியின் கீழ் பெரியத் துபாசியாகவும், வணிகராகவும் திகழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலக் கட்டத்தில் நிகழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் செய்திகளை 25 ஆண்டுக் கால நாட்குறிப்பாக்கிய மாமனிதர். எனவே, இவர் 'நாட்குறிப்பு வேந்தர்' என மக்களால் புகழப்படுகிறார். இவரின் நாட்குறிப்பு மூலம் 18ஆம் நூற்றாண்டுக் கால தமிழகம் முழுமையும் அறிய முடிகிறது. மேலும், இவரின் ஆளுமைத் திறன் என நோக்கும் போது கம்பெனியின் பொது முகவர், துவிபாசி வாணிகர், விவசாயிகளின் தளபதி, அரசியல் ஆலோசகர், பன்மொழி அறிவோர் மற்றும் திவன் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அவ்வகையில், இதுப் போன்ற சிறந்த ஆளிமைத் திறமையின் காரணமாகவே துவிபாசி பணியில் இவர், திவான் பதவி வரை உயர்ந்துள்ளார் என்பதைக் கருத முடிகிறது. எனவே, ஆனந்தரங்கர் பற்றியும், 18-ஆம் நூற்றாண்டுக் கால வரலாறுப் பற்றியும் பின்வரும் தலைமுறைகள் அறிந்து கொள்வது அவசியம் எனக் கருதும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது. எனவே, ஆனந்தரங்கர் பற்றியும் 18ஆம் நூற்றாண்டுக் கால வரலாறுப் பற்றியும் பின்வரும் தலைமுறைகள் அறிந்து கொள்வது அவசியம் எனக் கருதும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கருச்சொற்கள் :**ஆனந்தரங்கப்பிள்ளை, ஆளுமைத் திறன், நாட்குறிப்பு

**Abstract**

A journal defined as a document that records news and events of a personal nature. Samuel Pepesu and 'Anandarangapillai' are the big names in the field of journalism. 'Anandarangapillai' used the term of 'Sostha Ligitham' and 'Thinappadi' in his daily diary basis. He records all important historical event of the year range of 25 years and well knows with a nickname namely, 'Natkurippu Venthar'. ' Anadarangapillai' conceptualized as a competent man with many roles such as 'Thivipasi', 'Entrepreneur', 'Head of Farmer', and so on. Therefore, this study discuss about 'Anandarangapillai' and the history of 18th century.

**Keywords:** Personality skills, Anandarangapillai, Diary

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 3rd October 2019, revised 30th October 2019, accepted 22th November 2019

**முன்னுரை**

ஆனந்தரங்கப்பிள்ளை சென்னையை அடுத்த பெரம்பூரில் 1709 மார்ச் மாதம் 30 ஆம் தேதி பிறந்தார். இவரின் குடும்பம் சென்னை நாட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில் வாழ்ந்து வந்துள்ளது. இவரின் தந்தை திரு வேங்கடம்பிள்ளை பெரும் வணிகராக விளங்கியவர். தாயார் பற்றிய குறிப்புத் தெளிவாக அறியப்படவில்லை. புதுவையில் தரகராய் இருந்து வந்த பிள்ளையின் தாய்மாமன் நைனியப்பப்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க ஆனந்தரங்கரும் அவரின் தந்தை திருவேங்கடம்பிள்ளையும் புதுவைக்கு வந்தனர். புதுவைக்கு வந்த சில ஆண்டுகள் கடந்து, 1726 இல் திருவேங்கடம்பிள்ளை காலமானர். அப்பொழுது ஆனந்தரங்கருக்கு 17 வயது ஆகும். அக்காலக் கட்டத்தில் பிரெஞ்சுக் கவர்னர்களுக்குத் துவிபாசியாக இருந்து வந்த கனகராய் முதலியார் இறந்த பின்பு ஆனந்தரங்கரின் திறமை மற்றும் அறிவாற்றல் பிரெஞ்சுக் கவர்னர்களின் கவனத்தை ஈர்த்தன. எனவே, அக்காலத்தில் புதுவை பிரெஞ்சு ஆட்சியின் கீழ் செயல்பட்டபோது புதுவையை ஆண்ட கவர்னர்களில் குறிப்பிடத்தக்கவர் துய்ப்ளெக்ஸ் ஆவார். கி.பி 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த ஆனந்தரங்கர், துய்ப்ளெக்சின் ஆட்சிக் காலத்தில், அவரின் நம்பிக்கைக்கு உரியவராய், முறைப்படி 1946ல் தலைமை துவிபாசியாக பொறுப்பேற்றார் என்பதை (ஆலாலசுந்தரம், 1999)[1] குறிப்பிடுகிறார். இவர் வாழந்த பதினெட்டாம் நூற்றாண்டு ஆட்சிக் காலத்தில் நிலவிய சமூகநிலை, அரசியல், சமயம், பொருளாதார நிலை, வாணிகம், சாதிப் பிரிவினைகள் முதலான பல்வேறு முக்கிய நிகழ்வுகளை 1736 முதல் 1761 வரை, 25 ஆண்டுக்கால வரலாறாகத் தன்னுடைய நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். ஆனந்தரங்கர் தன் நாட்குறிப்பினை 'சொஸ்த

லிகிதம்' என்று குறிப்பிடுகிறார். மேலும், உலக நாட்குறிப்பு இயக்கத்தின் முன்னோடியான புகழ்பெற்ற ஆங்கில நாட்குறிப்பாளர் சாமுவேல் பெப்பீசு என்பவரைப் போன்று தமிழில் நாட்குறிப்பு எழுதியமையால் இவரை இந்தியாவில் 'நாட்குறிப்பு வேந்தர்' எனவும் போற்றுகின்றனர். மேலும் ஆனந்தரங்கர், துவிபாசி, அரசியல் ஆலோசகர், பன்மொழி அறிஞர், வாணிகர், விவசாயிகளின் தளபதி, மற்றும் திவான் போன்ற பல ஆளுமைத் திறன்களோடு காணப்படுகின்றார். அவ்வகையில் இவரின் ஆளுமைத் திறனைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆனந்தரங்கரின் பன்முக ஆளுமைகள்**

ஆனந்தரங்கர் பிரஞ்சிந்தியாவில் முரண்பட்டுள்ள நலன்களைத் தீர்க்கும் திறமையான சமரசவாதியாகவும், துய்ப்ளெக்சை முன் நிறுத்திய நிகழ்ச்சிகளில் பெரும்பங்கு கொண்டவராகவும் திகழ்ந்துள்ளார். 1736 லிருந்து துய்ப்ளெ வெளியேறிய 1754 வரை ஆனந்தரங்கர் சர்வ வல்லமை பெற்றவராய் இருந்தார். மேலும் இராஜதந்திரியாகவும், நிர்வாக திறன்மிக்கவராகவும் இருந்துள்ளார். ஆனந்தரங்கர் கம்பெனியின் பொது முகவராகப் பதவி வகித்துள்ளார். இவரின் திறன்களாகத் துவிபாசி, வாணிகர், விவசாயின் தளபதி, அரசியல் ஆலோசகர், பன்மொழி அறிஞர், திவான், துவிபாசி ஆகியவை விளங்கியுள்ளன.

துவிபாசி (துபாஷி) என்ற சொல்லிற்கு இருமொழி வல்லாளர் என்பதே நேர்முக தமிழ்ப்பெயர்ப்பு எனலாம். மேலும், துவிபாசி என்பது முதன்மைத்துவம் கொண்ட ஒரு பதவி. அரசினை ஆள்பவருக்குத் தமிழும், மக்களின் பலருக்குப் பிரெஞ்சும் தெரியாத ஒரு காலக்கட்டத்தில் இருதரப்பாளருக்குமான பாலமாக அமைபவரே இருமொழி வல்லாளர் என்பர். மேலும், ஆனந்தரங்கருக்கு துபாஷி பதவியை அளிப்பதில் கடும் எதிர்ப்பு இருந்தாகத் தெரிகிறது. அதன் பின் ஒரு பரிந்துரைக் கடிதம் மூலமாகப் பிரான்சு நாட்டு அரசருக்குத் துபாஷி பதவி குறித்து தெரிவிக்கப்பட்டது. ஆனால். பலரின் எதிர்ப்பால் கப்பல் போக்குவரத்துத் தடை காரணமாகவும் பிரான்சிலிருந்து ஆணை வருவது தாமதமானது இறுதியில் ஆனந்தரங்கர் நாட்குறிப்பில், இடம்பெற்ற

> "பெதுரு (கனகராயர்) செத்து முப்பது மாசமாச்சுது அன்றிலிருந்து இந்த உத்தி யோகத்தைப் பார்த்து வருகிறேன். ஒரு நாளாகிலும் இந்த இடம் கொடுக்கிறேனென்று குவர்னதோர் சொன்ன தில்லை. நானும் வேணுமென்று கேட்ட தில்லை. கோன்சேல் முடிவு பண்ணிக் காகிதம் சீர்மைக்குப் (பிரான்சிற்கு) போச்சுதென்று பலரும் சொன்னார்கள்." (தொகுதி - 5, ப – 130)[2].

செய்தியின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது. மேலும், துவிபாசி பதவிற்குப் பின், தினந்தோறும் காலையில் ஆனந்தரங்கம்பிள்ளை அவர்கள் முசியே துய்ப்ளெக்சைச் சந்தித்து உள்ளூரில்

உள்ள நடப்பு செய்திகள் கிட்டங்கு பற்றிய செய்திகள், கும்பினி வர்த்தகர் பற்றிய செய்திகள் ஆகிய அனைத்தையும் கூறி ஆலோசனைச் செய்யும் வழக்கம் இருந்து வந்துள்ளதை,

> ***"****இத்தனாள் காலத்தாலே பத்துமணிக்கு துரைவயர்களண் டைகும் போனவிடத்திலே – சாவடிக்கபுறும் – கும்பினீர் வர்த்தகர் கிட்டங்கி – முதலான பட்டணத்து கபுறு சொல்லியான பிற்பாடு சந்தாசாயபு – காகிதம் வந்ததே அதிலென்ன எழுதியிருக்கு தென்றும் – மதனாந்த பண்டிதனைக் கொண்டு வரச்சொல்லி கேட்டார்.****"*** (தொகுதி: 6, பக்- 32)[3].

இந்த நாட்குறிப்பின் மூலம் அறிய முடிகிறது.

## வாணிகம்

திருவேங்கடம் பிள்ளை இறப்பின்போது ஆனந்தரங்கருக்கு 17 வயது ஆகும். தனது 17 வயதிலே பிள்ளை வணிகக் கழகத்திற்குத் தலைவர் ஆனார். மேலும், பிரெஞ்சு ஆளுநருக்கு வணிகத்தின் பொருட்டு பல பணிகளைச் செய்துள்ளதால், பிள்ளை வணிகராகும்போது அந்தப் பயிற்சியின் காரணமாகத் திறமையானதொரு வாணிகத்தினை மேற்கொண்டார் என்று கூறலாம். அவ்வகையில், ஆனந்தரங்கர் துணி வணிகம், வெளிநாட்டு வணிகம், பாக்கு கிடங்கு, சாராயக் கடை, மளிகைக் கடை, புடவைக் கிடங்கு முதலான பல வணிகத்தினை நடதினார். அவர் காலத்தில் பாக்கு, வெற்றிலை வாணிகம் சிறப்பாக நிகழ்ந்துள்ளது. மேலும், குதிரை வாங்கி விற்கும் வியாபாரமும், சுண்னாம்பு வியாபாரம் போன்றவற்றையும் மேற்கொண்டுள்ளார். இவரின் முதன்மை வியாபாரமாகப் பவழ வியாபாரத்தினையும் நடத்தியுள்ளார். இவரின் ஆளுமைத் திறன் வணிகத்தில் மிகுந்துள்ளதை அறியலாம். மேலும், சிறு வயதிலே பணிக்கு செல்லும் குழந்தைகளைப் பற்றி ஆனந்தரங்கர் தம் கருத்தாக,

> ***"****இந்த காலத்துப் பிள்ளைகள் ஐந்து வயதிலேயே உத்தியோகம் பார்க்கும் ஆசையும் திரவியம் சம்பாதிக்கும் ஆவலும் கொண்டிருப்பதைப் பார்ப்பதும் கேட்கிறதும் அதியாச்சிரியாக இருக்கிறது****".*** (தொகுதி:3, பக் – 6)[4].

இவ்வாறு தம் நாட்குறிப்பில் 1746 ஆம் ஆண்டிலேயே குறிப்பிட்டுள்ளார்.

## விவசாயிகளின் தளபதி

கர்நாடகத்தில் விவசாயிகளின் தளபதியாகவும் ஆனந்தரங்கப்பிள்ளை இருந்தார். அரசருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும் கட்டுப்பாட்டுடன் பயிரிடுவோரிடமிருந்து குத்தகையை வசூலிக்கும் அதிகாரத்தைக் கொண்டவரே விவசாயிகளின் தளபதி ஆவார். புதுச்சேரி உட்படக் கர்நாடக நிலங்களின் குத்தகை வசூலிக்கும் உரிமை பெற்ற விவசாயிகளின் தளபதியாக ஆனந்தரங்கர் விளங்கினார். இந்தப் பதவியானது கர்நாடக மக்களைச் சந்திக்கவும், கட்டுப்படுத்தவும் ஆன உரிமையை அவருக்கு வழங்கியது. இதனால் அவருக்குச் செல்வாக்கும், புகழும் மேலோங்கி இருந்தன (அறவாணன், 1992)[3].

### அரசியல் ஆலோசகர்

அனந்தரங்கரின் நேர்மையான உழைப்பு மூலமாக ஆளுநர்களாகிய லெனுவார், துய்மா, துய்ப்ளே ஆகிய மூவரிடமும் பெரும் மதிப்பைப் பெற்றவராய் விளங்கினார். தென்னிந்திய அரசியல் முடிவுகளை எடுப்பதற்காகத் துய்ப்ளெ பல சமயங்களில் ஆனந்தரங்கரின் ஆலோசனைப் பெற்றுள்ளார். மேலும், உள்ளூர் வழக்குகளை விசாரணை செய்தல், நீதி வழங்குதல் முதலியவற்றையும் ஆனந்தரங்கர் மேற்க்கொண்டார். அக்காலத்தில் துவிபாசி பணியாற்றுவோர் தமிழ் மக்களின் தலைவராகவும் பொறுப்பேற்றனர். பல்வேறு கிராமங்களில் ஆனந்தரங்கர் வரிவசூல் செய்யும் குத்தகையை எடுத்திருந்ததால் நெருக்கடியான காலங்களில் எவ்விதம் நிதியினைத் திரட்ட வேண்டும் என்பதை பற்றிய ஆலோசனைகளையும் விரிவாகக் கூறியுள்ளார். இவ்வாறு அரசியல் சார்ந்த ஆளுமைத் திறன்களிலும் சிறப்புற்றிருந்தார். ஆனந்தரங்கர் தமிழ் மக்களின் தலைவராகவும் துபாஷியாகவும் இருந்தபோது மக்கள் வழக்குகளைத் தீர்க்கும் கடமையும் கொண்டிருந்தார். மேலும் தங்கம், வெள்ளி, நாணங்களை அச்சடிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டது (அறவாணன், 1992)[3].

### பன்மொழி அறிஞர்

ஆனந்தரங்கர் தமிழ் மற்றும் ஆட்சித் தொடர்பினால் பிரெஞ்சு மொழியும் அறிந்தவர். மேலும், போர்ச்சுகீசியம், பார்சி போன்ற மொழிகளையும், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்துஸ்தானி, மராத்தி போன்ற மொழிகளையும் நன்கு அறிந்திருந்தார். வணிகத் தொடர்பும், அரசியல் ஆட்சித் தொடர்புமே பல மொழிகளையும் அறிய காரணமானது எனலாம். மேலும், பல மொழிகள் தெரிந்தும் தனது நாட்குறிப்பினைத் தமிழ் மொழியில் எழுதிய சிறப்புக்குரியவர் ஆவர். மேலும், இவரது நாட்குறிப்புகள் புதுச்சேரி மைய இந்திய தேசிய ஆவணக் காப்பகத்தில் தமிழ், தெலுங்கு, மராத்தி, பிரெஞ்சு போன்ற மொழிகளில் நாட்குறிப்புகள் இருப்பினும் அவ்வணைத்திலும் ஆனந்தரங்கப்பன் என்று தமிழிலேயே கையொப்பம் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், ஆனந்தரங்கர் பன்மொழி அறிந்தவர் என்பதை, "ஒரு சமயம் முகம்மது அலிகானின் தண்டிலேயிருந்து உளவறிந்து நயினாரின் ஆள் ஒருவன் வந்து தகவல் தெரிவித்தான். அதைப் பிரதி போன்ற பிரெஞ்சு அதிகாரிகளுக்காக மொழி பெயர்த்துச் சொல்லுமாறு துய்ப்ளே பிள்ளையிடம் கூறினார் (தொ:3, பக் – 183). பார்சி பாஷை படிக்கத்தெரியாது என்றாலும் புரிந்து கொள்வர் அவர். ஆனால் இந்துஸ்தானி பேசத் தெரியும் (தொ:4, பக்-345, தொ:8, பக்-189, தொ:9, பக்-1413). பிரெஞ்சு கடிதங்கள் பலவற்றை அவர் படித்தை நாட்குறிப்புத் தெரிவிக்கிறது (தொ:1, பக்-18). ஒரு நாள் துய்ப்ளே பிள்ளையை அழைத்து, விஜயராமராசர் எழுதிய தெலுங்கு கடிதத்தைப் பிரெஞ்சில் பெயர்த்து எழுதித் தருமாறு கேட்க, பிள்ளையும் அவ்வாறே எழுதிக் கொடுத்தார். அதே நேரத்தில் மசூலிப் பட்டணத்திலிருந்து பார்சி காகிதத்தில் வந்த சேதியையும் எடுத்துக் கூறினார். மலையாள

மொழியில் கேரளத்து மன்னர்கள் அனுப்பியிருந்த கடிதங்களையும் அவர் விளக்கிக் கூறுவார்," ஆலாலசுந்தரம் (1999)[1] இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**திவான்**

ஆரம்பத்தில் வெறும் துவிபாசி (மொழிப்பெயர்பாளர்) ஆக பணியைத் தொடங்கிய ஆனந்தரங்கர் தன் திறமையாளும் அறிவாற்றாலும் படிப்படியாகப் பல்வேறு பதவிக்கு உயர்ந்து கொண்டே சென்று பல்வேறு அதிகாரத்தினையும் பெற்று, அப்பணிகளைச் சிறப்பாக நடத்தி வந்தார். மேலும், அவர், மிக உயர்பதிவியான திவான் என்ற பதவியையும் அடைந்தார். திவான் என்பதற்கு முதன்மையானவர் அரசிறையதிகாரி முதன்மைத்துவம் வாய்ந்தவர் எனப் பல பொருளில் கூறலாம். ஆளுநருக்கு அடுத்தப்படியாக உயர்ந்து திவான் என்ற அதிகாரத்தின் மூலம் தனது ஆளுமையினைக் கொண்டு அனைத்துப் பணிகளையும் சிறப்பாக நிறைவேற்றினார் எனக் கருதமுடிகிறது (அறவாணன், 1992)[2].

**ஆனந்தரங்கர் இலக்கியங்கள்**

ஆனந்தரங்கரின் பெருமையை உணர்ந்து அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் பலர் அவரைப் பற்றிய பாடல்களை இயற்றி பரிசிலும் பெற்றுச் சென்றுள்ளதை அறிய முடிகிறது. அவ்வகையில், ஆனந்தரங்கர் குறித்த இலக்கியங்களாக ஆனந்தரங்கன் கோவை, ஆனந்தரங்கன் புதினங்கள், ஆனந்தரங்கன் தனிப்பாடல்கள், ஆனந்தரங்க விஜயசம்பு, கள்வன் நொண்டிச் சிந்து, ஆனந்தரங்க ராட்சந்தமு, ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் ஆகியவை விளங்குகின்றன. மேலும், ஆனந்தரங்கர் இலக்கியங்கள் பற்றிய பல செய்திகளையும் விரிவாக்கங்களையும் நா. செல்வராசு (2010)[5] குறிப்பிடுகிறார்.

**ஆனந்தரங்கர் பெற்ற விருதுகள்**

சிற்றரசர்களுக்கு ஆலோசகராகவும், உதவியாளராகவும் இருந்ததால் அவர்கள் ஆனந்தரங்கருக்கு கி.பி.1749 இல் முசபர் ஐங்கு எனும் முகலாய சிற்றரசர் மூவாயிரம் குதிரைகளைப் பரிசாகத் தந்து 'மன்சுபேதார்' எனும் பட்டம் அளித்துள்ளார். வஜாராதராய விஜயன் எனும் பட்டமும் வழங்கப்பட்டது. செங்கற்பட்டுக் கோட்டைக்குத் தளபதியாகவும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கே 'ஜாகீர்தார்' ஆகவும் நியமனம் செய்து கௌரவிக்கப்பட்டார். கர்நாடக நவாபு அரசியல் திறமையைக் கண்டு அவருக்கு 'வஜீர்' எனும் பட்டம் அளித்தார். தங்கப்பிடி இடப்பட்ட கைத்தடி வைத்துக் கொள்ளவும் செருப்பு அணிந்து ஆளுநர் மாளிகைக்குள் செல்லவும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆளுநர் மாளிகைக்குள் பல்லக்கில் செல்லும் உரிமையும் அளிக்கப்பட்டிருந்ததையும் அறிய முடிகிறது. மேலும்,

ஆனந்தரங்கர் பெற்ற விருதினைக் குறித்து "டில்லிப் பேரரார் அவரை 3000 குதிரைக்குரிய மன்சப்தாராகவும் மகன் அண்ணாசாமியை 1500 குதிரைக்குரிய மன்சப்தாராகவும் நியமிக்கும் பர்வானாக்களைப் பிரெஞ்சு கேப்டர் மீரான் வசம் தந்தனுப்பினார். ஆற்காடு நவாபுகளும் பிறரும் கூட பிள்ளைக்கும் அண்ணாசாமிக்கும் பல ஜாகீர்களைத் தந்தனர். சுதேசச் சிற்றரர்கள் பலரும் பிள்ளைக் களித்த குதிரை, பல்லக்கு, வாள், சீரொப்பா, பாகை கோட்டு, பீதாம்பரம், நகை முதலியவற்றை நாட்குறிப்பின் பல பகுதிகளிலும் படிக்கலாம்," என ஆலாலசுந்தரர் (1999)[1] குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

பிரெஞ்சு ஆட்சியின் கீழ் மிகப்பெரிய துபாசியாகவும் பெரிய வணிகராகவும் திகழந்த ஆனந்தரங்கர், பதினெட்டாம் நூற்றாண்டாகிய தாம் வாழ்ந்த காலத்தில் நிகழந்த அத்துணை நிகழ்வுகளையும் தம் நாட்குறிப்பின் மூலமாக, ஒரு வரலாற்றுப் பெட்டகத்தை நமக்கு அளித்துள்ளார். இதன்மூலம் ஆனந்தரங்கரைப் பற்றியும், பதினெட்டாம் நூற்றாண்டில் நிகழந்த 25 ஆண்டுக்கால வரலாற்றையும் அன்றையத் தமிழ் மக்களின் வரலாற்றையும் அறிந்து பயனடைவதற்கு இவரின் நாட்குறிப்புகள் ஓர் அரிய பொக்கிஷமாக நமக்குக் கிடைத்துள்ளது என்பதை உணரலாம்.

**துணைநூற்பட்டியல்:**


1. Alalasundaram, R. (1999). *Tamizhakam during Anandarangam Pillai period (ஆனந்தரங்கம் பிள்ளை காலத் தமிழகம்).* Puducherry: GRS Publications.
2. *Anandarangapillai Journal, Volume – 5 (ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, தொகுதி – 5).* (1998). Puducherry: Puducherry Panpattuthurai.
3. Aravaanan, K, P. (1992). *Research on Anandarangar diary (ஆனந்தரங்கர் நாட்குறிப்பு ஆய்வு).* Puducherry: Pondicherry University.
4. Gopala Krishnan, M. (2008). *Anandarangapillai diary 1753-1754 (ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு 1753 – 1754).* Chennai: Palaniappa Brothers.
5. Selvarasu, N. (2010). *Anandaranga Pillai (ஆனந்தரங்கப் பிள்ளை).* New Dehli: Perochsha Road.